[15th December 1961

etc., at M. 6/1 to M. 6/3 has been sanctioned and work is in full swing. An estimate amounting to Rs. 49,000 for carrying out improvements in the reach M 6/3 to 6/5 is under scrutiny by the Executive Engineer. The work will be taken up after the estimate has been sanctioned.

Sri M. S. SELVARAJAN : ஸார், தாம்பரபரணியில் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுக்குக் கீழே எதன் பகுதி கரையில், முன்பு உடைப்பு எடுத்திருந்த இடங்களாகிய சேந்தமங்கலம், குரங்கணி பகுதிகளில் என்ன ஏற்பாடுகள் இப்பொழுது செய்யப் பட்டிருக்கிறது.

The Hon. Sri P. KAKKAN : அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

Periyar lake

*** 2415 *Q.*—Sri N. R. THIAGARAJAN :** கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா பெரியாறு ஏரியில் 1961-ம் வருஷம் ஜூன் மாதம் 1-ம் தேதி முதல் 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 23-ம் தேதி வரை ஒவ்வொரு நாளிலும் இருந்த நீர்மட்டம் எவ்வளவு?

(இ) பெரியாறு டன்னல் (குகைப்பாதை) வழியாக சாதாரண நாட்களில் எவ்வளவு தண்ணீர் விடப்படுகிறது?

(உ) ஏரி நிறைந்த பின்னரும், ஏரி நிறைவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பும், சராசரி தினமும் எவ்வளவு தண்ணீர் மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கு விடப்பட்டது?

The Hon. Sri P. KAKKAN : (அ) to (உ) A statement [a] is placed on the table of the House.

Sri N. R. THIAGARAJAN : அந்த டன்னலில் 4,000 க்யூசெக்ஸ் திறந்து விடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த டன்னலில் நானும் மின்சார அமைச்சரும் போய்ப் பார்த்தோம். அதன் வழியாகவே நாங்கள் சென்றோம். அப்படி 4,000 க்யூசெக்ஸ் விடலாம் என்றும் கண்டோம். வீணாக சமுத்திரத்தில் விழக்கூடிய தண்ணீரை அப்படி அந்த டன்னல் வழியாக விட்டால் அந்தப் பக்கத்திலுள்ள மதுரை ராமநாதபுரம் பகுதிகளுக்கு திறந்து விட்டால் சௌகர்யமாக இருக்கும் அல்லவா? அதைப் பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா?

The Hon. Sri P. KAKKAN : மழைத் தண்ணீரும் மற்ற தண்ணீரும் சமுத்திரத்திற்குப் போகக்கூடாது என்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கமும். அதனால் எவ்வளவு தண்ணீர் விடவேண்டுமோ அந்த அளவில் விடப்பட்டு வருகிறது. மின்சார உற்பத்திக்கு எவ்வளவு விடவேண்டுமோ அவ்வளவு விட்டுக் கொண்டுதான் வரப்படுகிறது. அதற்குக் குறைவாக வேண்டுமென்றால் குறைவாகவும், அதிகமாக வேண்டுமானால் அதிகமாகவும்

---

[a] Printed as Appendix XIV on page 1112 infra.

15th December 1961]

விடப்பட்டுதான் வருகிறது. மின்சார சப்ளை பாதிக்காத அளவில் எவ்வளவு தண்ணீர் விடவேண்டுமோ அந்த அளவில் விடப்பட்டு தான் வருகிறது.

Co-operative farms for Harijans

* 2416. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹரிஜன் பின்தங்கிய வகுப்பினர்களுக்கென்று தனியாக அல்லது கூட்டாக கூட்டுப் பண்ணைகள் எங்கெங்கே ஆரம்பிக்கப் பட்டுள்ளன?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

Sale of Cement by private individuals

* 2417 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா —

தனி நபர்களுக்கு சிமெண்ட் விற்பனை செய்யும் அனுமதி கொடுப்பதை ரத்து செய்து, கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யும் முறையை அமுலில் கொண்டுவர உத்தேச முண்டா?

THE HON. SRI P. KAKKAN : No. Sir, However necessary instructions have been given to the selling agents of State Trading corporation to give preference to Co-operatives while replacing or appointing Cement stockists. Two Co-operative Societies, one in Thanjavur districts and the other in Ramanathapuram district have been appointed as stockists.

Teacher's training

* 2418 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1958 முதல் 1961 வரை திருச்சி ஜில்லாவில் தமிழ் ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் தேர்வு பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அதில் எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்தாகி விட்டது?

(உ) மீதம் உள்ளவர்களின் எண்ணிக்கை என்ன?

(எ) முறையாக வேலை கொடுக்கப்படுகிறதா?

(ஐ) முறைதவறி நடந்திருந்தால் முறையுடன் நடத்து வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (ஐ) Particulars have been called for from the Director of Public Instruction. A statement will be placed on the table of the House.

---

a Printed as Appendix XV on page 1113 infra.